# செயலட்டை – தமிழ் (01)

## பிரமி கல்வி நிலையம்

S. மோகன் 0779685514

**அறிவுறுத்தல்.**

* பந்தி / பாடல்களை வாசிக்குக.
* பந்தி / பாடல்களை மாத்திரம் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.

**01)** சந்திரன் தன் பொன்னொளியை வீசிக் கொண்டிருந்தது. தொங்கவிடப்பட்ட தங்கத் தகடுகளைப் போல நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. வானில் அங்குமிங்கும் சில கருமேகக் கூட்டங்கள் காணப்பட்டன. அவை, காற்று வீசும் திசை வழியே தொலைவு நோக்கிச் சென்று கொண்டிருப்பதை எம்மால் காணமுடிந்தது.

1. சந்திரன் எதனை வீசிக்கொண்டிருந்தது?

   …………………………………………………………………………………………………

2. தொங்கவிடப்பட்ட தங்கத் தகடுகளுக்கு ஒப்பாகக் கூறப்பட்டவை எவை?

   …………………………………………………………………………………………………

3. “அருகு” என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

   …………………………………………………………………………………………………

4. “ஆகாயத்தில்” என்பதன் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

   …………………………………………………………………………………………………

5. காற்று வீசும் திசை வழியே சென்று கொண்டிருந்தவை எவை?

   …………………………………………………………………………………………………

6. பந்தியில் இடம்பெறும் இணைமொழியை எழுதுக.

   …………………………………………………………………………………………………

**02)** செக்கச் சிவந்த கதிரவன் கிழக்கு வானில் உதித்து எழுந்தது. பறவைகள் இன்னிசை கீதம் இசைத்தபடி வானில் பறந்து சென்றன. தாவர இலைகளில் படிந்திருந்த முத்துக்கள் போன்ற பனித்துளிகள் மறையத் தொடங்கின. மெல்லிய குளிர் காற்று மேனியைச் சில்லிட வைத்தது. செடிகளில் பூத்திருந்த மலர்களின் மணம் மூக்கைப் பறித்தது. வளைந்து நெளிந்து செல்லும் நீரோடை, கதிரவனின் பொன்னொளிபட்டுப் பளபளத்தது.

1. “பாடல்” என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

   ………………………………………………………………………………………………..

2. “சூடு” என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

   ………………………………………………………………………………………………..

3. செக்கச் சிவந்து காணப்பட்டது எது?

   ………………………………………………………………………………………………..

4. தாவர இலைகளில் படிந்திருந்தவை எவை?

……………………………………………………………………………………………..

5. எது பட்டதினால் நீரோடை பளபளத்தது?

……………………………………………………………………………………………..

6. பந்தியில் இடம்பெறும் இணைமொழியைத் தருக.

……………………………………………………………………………………………..

**03)** மரங்கள் அடர்ந்த ஒரு காடு இருந்தது. ‘‘அந்தக் காட்டின் இடையே ஓர் ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையில் ஒரு பெரிய அரச மரம் நின்றது. ஆற்றங்கரையில் இருந்த அரச மரத்திற்கோ ஆண்டு முழுவதும் தண்ணீருக்குக் குறைவில்லை. வண்டல் கலந்து வந்த நீர் அரச மரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது.

1. ‘‘வனம்’’ என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

………………………………………………………………………………………………

2. பந்தியில் இடம்பெறும் எழுவாய் அடைமொழியை எழுதுக.

………………………………………………………………………………………………

3. காட்டின் இடையே ஓடிக்கொண்டிருந்தது எது?

………………………………………………………………………………………………

4. அரச மரம் எங்கே இருந்தது?

………………………………………………………………………………………………

5. எவ்வாறான நீர் அரச மரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது?

………………………………………………………………………………………………

6. பந்தியில் இடம்பெறும் அஃறிணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.

………………………………………………………………………………………………

**04)** மாமரங்கள் ஆண்டு முழுவதும் நிழலைத் தருகின்றன. இதன் இலை, காய், விதைகள் மற்றும் இளம் கிளைகள் ஆடு மாடுகளுக்கு உணவாகின்றன. மாமரம் கோடை காலத்தில் தீஞ்சுவைக் கனிகளைத் தருகின்றது. அதன் உறுதியான பரந்த கிளைகள் சிறுவர்களின் பள்ளிக்கூடம் ஆகும். மாம்பழங்களைக் கொண்டு பழச்சாறு, பழக்கலவை தயாரிக்கிறார்கள்.

1. மாமரங்கள் வருடம் முழுவதும் எதனைத் தருகின்றன?

………………………………………………………………………………………………

2. ஆடு மாடுகள் உண்ணும் மாமரத்தின் பகுதிகள் இரண்டை எழுதுக.

………………………………………………………………………………………………

3. ‘‘மாரி’’ என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

………………………………………………………………………………………………

S. Mohan

4. மாமரத்தின் பரந்த கிளைகள் யாரின் பள்ளிக்கூடம் எனக் கூறப்படுகின்றது.

……………………………………………………………………………………………………

5. ''இனிமையான சுவை'' என்னும் கருத்தைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

……………………………………………………………………………………………………

6. ''பழச்சாறு'' என்பதைப் பிரித்து எழுதுக.

……………………………………………………………………………………………………

**05)** சிங்கங்கள் மிகவும் பலம் வாய்ந்தவை. அவற்றிற்கு மோப்பசக்தி அதிகம். சிங்கங்கள் கர்ச்சித்தால் சுமார் எட்டுக் கிலோ மீற்றர்வரை எதிரொலிக்கும். வரிக்குதிரைகள் குதிரை இனத்தைச் சேர்ந்தவை. அவை மிக வேகமாக ஓடும் ஆற்றல் பெற்றவை. அவற்றின் பார்வை மிகவும் சக்தி வாய்ந்தவை.

1. சிங்கங்களிடம் அதிகம் காணப்படும் சக்தி எது?

……………………………………………………………………………………………………

2. சிங்கங்கள் கர்ச்சிக்கும் ஒலி எத்தனை கிலோமீற்றர் வரை எதிரொலிக்கும்?

……………………………………………………………………………………………………

3. வரிக்குதிரைகள் எவ்வினத்தைச் சேர்ந்தவை?

……………………………………………………………………………………………………

4. வரிக்குதிரைகளிடம் காணப்படும் ஆற்றல் எது?

……………………………………………………………………………………………………

5. ஒரே கருத்தைத் தரும் மூன்று சொற்கள் பந்தியில் வந்துள்ளன. அம்மூன்று சொற்களையும் எழுதுக.

……………………………………………………………………………………………………

6. ''அது'' என்பதன் பன்மைச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

……………………………………………………………………………………………………

**06)** மிக அதிகமாக மணல் மற்றும் மணற்குன்றுகள் நிறைந்த பகுதி பாலைவனம் எனப்படும். இது உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் கடினமான பகுதியாகும். இந்தப் பகுதிகளில் மணல், புழுதிப் புயல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதன் காரணமாக மணற்குன்றுகள் உருவாகின்றன. அதிக வறட்சியைத் தாங்கி வளரும் கள்ளி, பனை போன்ற சில தாவரங்கள் மட்டுமே இங்கு வளர்கின்றன. கங்காரு, ஆமை, சிலவகைப் பாம்புகள், பல்லிகள், ஒட்டகங்கள் போன்றவை பாலைவனச் சூழலைச் சமாளித்து உயிர் வாழும் உயிரினங்களாகும்.

1. பாலைவனத்தின் பரப்பளவில் மிக அதிகம் காணப்படுபவை எவை?

……………………………………………………………………………………………………

2. மணல், புழுதிப் புயல்களால் பாலைவனத்தில் உருவாகின்றவை எவை?

……………………………………………………………………………………………………

S.Mohan

3. பாலைவனத்தில் வாழக்கூடிய ஊர்வன அல்லாத இரண்டு பிராணிகளை எழுதுக.

……………………………………………………………………………………………………

4. மணற்குன்றுகள் என்பதைப் பிரித்து எழுதுக.

……………………………………………………………………………………………………

5. ‘‘இலகுவான’’ என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

……………………………………………………………………………………………………

**07)** ஓவியங்கள் கண்ணுக்கு விருந்தளிப்பவை ; சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டுபவை ; குறிப்பால் பொருள் உணர்த்தும் தன்மை கொண்டவை ; மனதிற்கு அமைதியைத் தருபவை. அவ்வாறு உலகப் புகழ் பெற்ற ஓவியங்களுள் முதன்மையானது ‘‘மோனலிசா’’ ஓவியமாகும்.

1. கண்ணுக்கு விருந்தளிப்பவை எவை? ……………………………………………………………
2. ‘‘சத்தம்’’ என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லை எழுதுக. ……………………………………………..
3. ‘‘கீர்த்தி’’ என்பதன் ஒத்தக்கருத்துள்ள சொல்லை எழுதுக. ……………………………………………
4. உலகப் புகழ் பெற்ற ஓவியம் எது? ………………………………………………………………

**08)** ‘‘கூழானாலும் குளித்துக்குடி’’, ‘‘கந்தையானாலும் கசக்கிக் கட்டு’’ போன்ற முதுமொழிகள் நாம் உடற் சுத்தத்தைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன அல்லவா? வெளியிடங்களுக்குச் சென்று வருவதனால் ஏற்படும் களைப்பை நீக்கி மனதிற்கும் உடலுக்கும் உற்சாகத்தைத் தரும் இடம் நாம் வாழும் இல்லங்களே ஆகும்.

1. பந்தியில் எதன் முக்கியத்துவம் பற்றி கூறப்படுகின்றது?

……………………………………………………………………………………………………

2. பந்தியில் இடம்பெறும் தன்மை பெயர்ச் சொல்லை எழுதுக.

……………………………………………………………………………………………………

3. மேனி என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

……………………………………………………………………………………………………

4. சோம்பல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

……………………………………………………………………………………………………

5. ‘‘வலியுறுத்துகின்றன’’ என்பதன் இறந்தகால வடிவினை எழுதுக.

……………………………………………………………………………………………………




S.Mohan